International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 05 Issue: 03 July to September 2023 www.irjtsjournal.org

# அப்பர் தேவாரம் ஓர் அறிமுகம்

பேராசிரியர்.கலாநிதி, திருமதி.விக்னேஸ்வரி பவநேசன்

*இந்து நாகரிகத்துறை,*
*முன்னாள் தலைவர் சைவசித்தாந்தத்துறை,*
*இந்துகற்கைகள் பீடம்,*
*யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.*

**ஆய்வுச்சுருக்கம்**

*திருநாவுக்கரசர் சைவசமய குரவர்கள் நால்வரில் ஒருவராகவும் அறுபத்துமூன்று நாயனமார்களுள் ஒருவராகவும் வைத்துப் போற்றப்படுவர். திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருவாமூரில் புகழனாருக்கும் மாதினியாருக்கும் மகனாகப் பிறந்தவர். சைவசமயத்தின் பெருமைகளை உலகிற்கு நிலைநாட்டியதோடு சரியைத் தொண்டினைச் செய்து இறைவனடியை அடைந்தவர். பல சிவாலயங்களுக்குச் சென்று இறைவனது அருளை வியந்து, அதனையே நாடி, இயன்றவாறு அவனுக்கென்றே தொண்டு நெறிகளை அன்போடு அயராது செய்தவர். பன்னிரு திருமுறைகளில் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகள் திருநாவுக்கரசர் அருளியவை ஆகும். சேக்கிழார் பெருமான் சைவநெறி தான் பெற்ற புண்ணிமக்கள் இரண்டு என சம்பந்தரையும், அப்பரையும் போற்றுகின்றார். சிவஞான சுவாமிகள் காஞ்சிப்புராணத்தில் அப்பருக்கு இயற்றிய துதிப்பாடலில் அவரது தேவாரப் பாடல்களை ஞானப்பாடல் என்று அருளியுள்ளார். இவ்வகையில் அருந்தவத்தோர் நெறிவாழ அவதரித்த சைவநெறி பெற்ற புண்ணியக் கண்ணான அருந்தவமுனிவரின் ஞானப்பாடல்களை பகுப்பாய்வுமுறை, மற்றும் விபரண ஆய்வு முறையியல்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். இவ்வாய்வின் மூலங்களாக அப்பர் பாடல்களான நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகள் ஆராயப்படுகின்றன.*

திறவுச்சொற்கள்: *அப்பர்,தேவாரம், பாடல்கள், இறைவன்*

**காலமும் பின்னணியும்**

சைவ சமய குரவர்கள் நால்வருள் ஒருவராகப் போற்றப்பெறும் திருநாவுக்கரசரின் இயற்பெயர் மருணீக்கியார் ஆகும். ‘‘அப்பர்’’,‘‘ வாகீசர்’’ எனும் பெயர்கள் திருஞானசம்பந்தரால் வழங்கப்பெற்றன. சமண சமயத்தில் இருந்தபோது ‘‘தருமசேனர்’’ எனும் பெயர் சமண அறிஞர்களால் வழங்கப்பெற்றது. இறைவனால் வழங்கப்பெற்ற பெயரே திருநாவுக்கரசர் ஆகும். திருத்தாண்டகம் பாடியமையால் ‘‘தாண்டக வேந்தர்’’ எனவும் ‘‘தாண்டக சதுரர்’’ என்றும் அவரை அழைக்கலாயினர்[1].

தேவாரம் பாடிய மூவருள் காலத்தால் முற்பட்டவர் திருநாவுக்கரசர் ஆவார். அவர் மாணிக்கவாசகர் வாழ்ந்த காலத்திற்கு பின்னர் வாழ்ந்தவர் என்றும் மாணிக்கவாசகர் காலத்திற்கு முன்னர் வாழ்ந்தவர் என்றம் அறிஞர்கள் பல கருத்துக்களைக் கூறியுள்ளனர். இவ்வகையில் கி.பி 5ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று தணிகாசல முதலியாரும்[2] கி.பி 5ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று சீனிவாசபிள்ளையும்[3] கி.பி 580க்கும் 660க்கும் இடைப்பட்ட காலத்தவர் என்று இராசமாணிக்கனாரும்[4] கி.பி 550க்கும் 650க்கும் இடைப்பட்ட காலத்தவர் என்று கா.சுப்பிரமணியபிள்ளையும்[5] கி.பி 574க்கும் 655க்கும் இடைப்பட்டவரென இராமச்சந்திரஞ் செட்டியாரும்[6]கி.பி 7ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று வெள்ளைவாரணனாரும்[7] ஔவை சு. துரைச்சாமிப்பிள்ளையும்[8] கூறுவர். எனவே பொதுவான நோக்கில் அப்பர் கி.பி 7ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று கூறலாம்.

தமிழ்நாட்டில் பக்தி இயக்கத்தை மக்கள் முன்னெடுத்துச் சென்றவர்களுள் முதல்வர் என்ற பெருமை முதியவரான திருநாவுக்கரசருக்குரியது. இளமையில் கல்வி நோக்கில் சமணம் சார்ந்து கற்று வல்லவரான இவர் அச்சமயத்தில் இருந்து சைவத்திற்கு மீண்டவர் என்பது பெரியபுராணம் கூறும் வரலாறு. அவ்வாறு மீண்ட இவர் மீது சமணர் அரச ஆதரவுடன் பல கொடுமைகளை மேற்கொண்டனர். எனினும் இவர் சைவத்தின்பால் கொண்டிருந்த பற்றுறுதி குலையாமல் அவையனைத்தையும் சகித்து உயிர் பிழைத்தார்.அதன்மூலம் சைவத்தின் பெருமையை உலகறியச் செய்தார். தன்னைத் தண்டித்த சமணச்சார்பான மன்னனை (முதலாம் மகேந்திரவர்மன் கி.பி 600-630) சைவனாக மாறவைத்தார். தமிழகத்தின் பல ஊர்களுக்கும் நடைப்பயணம் மேற்கொண்டு தமிழோடு இசை பாடும் பணியும், உழவாரத் திருப்பணியும் செய்தார். சிவன் அருளால் பல அற்புதங்கள் அருளினார்[9]. இவருடைய வாய் மொழிகளாக இன்று எமக்குக் கிடைப்பவை பன்னிரு திருமுறைத் தொகுப்பில் 4ம், 5ம், 6ம் திருமுறைகளாகும்.

சைவ மரபில் அப்பர் வாழ்க்கை ‘‘தாச மார்க்கம்’’ எனப்படுகின்ற சரியை எனும் பாதத்தினைப் புலப்படுத்துவது. உடல் உழைப்பின் பெருமையை என்றும் உணர்த்துவது.நாவினால் பாடினாலும், நெஞ்சினால் நினைத்தாலும் போதாது,மெய்யினால் பணி செய்ய வேண்டும் என்ற அடிமைத்திறத்தைப் பேருண்மையைப் புலப்படுத்துகின்றது[10].

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

© 2023, IRJTSR 

**பதிக அமைப்பு**

அப்பர் தேவாரத் திருமுறைகள் மூன்று பிரிவாக வகுக்கப்பட்டுள்ளன. பாடப்பெற்ற தலம் எதுவெனத் தெரியாமல் இருக்கும் பதிகங்கள் பொதுப்பதிகம் எனவும்,தனிப்பதிகம் எனவும் வழங்கப்பட்டுள்ளன. அப்பதிகங்கள் இம்மூன்று திருமுறைகளிலும் இடம்பெற்றுள்ளன. பதிகங்களின் அமைப்பு முறையைப் பின்வருமாறு வகுக்கலாம்.

1. மூன்று திருமுறைகளிலும் காணப்படும் பொதுவான செய்திகள்
2. நான்காம் திருமுறை (பொதுப்பதிகங்கள் நீங்கலாக)
3. ஐந்தாம் திருமுறை (பொதுப்பதிகங்கள் நீங்கலாக)
4. ஆறாம் திருமுறை (பொதுப்பதிகங்கள் நீங்கலாக)
5. பொதுப்பதிகங்கள்

**திருப்பதிகங்களின் ஆராய்ச்சி**

இறைவனுடைய பெருமைகளும் அவன் உயிர்களுக்கு அளிக்கும் கருணைத் திறமும்:

1. உலகமக்களுக்கு அருள் செய்தற் பொருட்டே ஊர் தோறும் கோயில் கொண்டுள்ளான்.
2. இறைவன் திருவருளாகிய செல்வமும் அது பெற்று வாழும் வாழ்வுமே இனிறியமையாதன.
3. இறைவனைத் தலைவனாகவும் அவனது பேரருள் இன்பத்தை விரும்பி நிற்கும் ஆருயிராகிய தம்மைத் தலைவியாகவும் வைத்துப் பாடிய அகப் பொருட் பாடல்கள் பல உள்ளன [11].

நாலாம் திருமுறையில் 113 பதிகங்களும் 1070 திருப்பாடல்களும் ஐந்தாம் திருமுறையில் 100 பதிகங்களும் 1015 பாடல்களும், ஆறாம் திருமுறையில் 99 பதிகங்களும் 981 பாடல்களும். உள்ளன. ஆக 312 பதிகங்களும் 3066 பாடல்களும் அடங்கியது இப்போது கிடைக்கும். அப்பர் தேவாரம். சுந்தரர் திருநின்றியூர்ப் பதிகத்தில் இது பற்றிக் குறிப்பிடுகையில்,

“இணைகொள் ஏழெழுநூ றிரும்பனுவல் ஈந்தவன்

திருநாவுக்கரையன்” என்றும்

பதினோராந் திருமுறையில் நம்பியாண்டார் நம்பி தாம் பாடிய திருவேகாதச மாலையில்

“ பதிகம் ஏழெழுநூ றுபகருமா கவியோகி பரசு

நாவரசான பரம காரணவீசன்”

என்றும் பாடுவதனால் திருநாவுக்கரசர் பாடியவை 4900 (நாலாயிரத்து தொழாயிரம்) என்று தெரிகிறது.

திருமுறை கண்ட புராணத்தில்

“நண்புற்ற நாவரசர் முந்நூற்றேழ் மூன்றினால்”

என வருவதால் திருமுறைகளை வகுத்த போது 321 பதிகங்கள் கிடைத்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.ஆனால் இப்போது 312 பதிகங்களே உள்ளன[12].

ஐந்தாம் திருமுறை முழுவதும் திருக்குறுந்தொகைப் பாக்களாகும். இப்பாக்களுக்குரிய பண்ணின் பெயர் குறிக்கப்படவில்லை. கலிவிருத்தங்களாக உள்ள இப்பாக்களும் “குறுந்தொகை” எனும் யாப்பு வகையைக் குறிக்கும் பெயராகும். ஆறாந் திருமுறை முழுவதும் திருத்தாண்டகம் ஆகும். தாண்டகம் என்பது யாப்பு வகையின் பெயரே ஆகும். இப்பாக்கள் எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தங்களாக உள்ளன[13].

இவ்வாறான, திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகங்கள் இறைவன் இயல்பு, உயிர்களின் இயல்பு, இறைவன் உயிர்க்கு அருள் செய்யும் திறம், கற்றவரும் ஞானிகளும் பிறரும் இறைவனுக்கு அடியார்களாய் அன்பு செய்யும் முறை, இறைவன் அவர்களுடைய மனத்தின் கண் எழுந்தருளி இன்புறுத்துவது முதலிய பல பொருள்களை விரித்துக் கூறுகின்றன. இவ்வகையில்,

“பொறிப் புலன்களைப் போக்கறுத்து உள்ளத்தை நெறிப்படுத்த

நினைத்தவர் சிந்தையுள் அறிப்புறும் அமுதாயவன்”

என்பதனுள்,“பொறிப் புலன்களைப் போக்கறுத்து உள்ளத்தை நெறிப்படுத்த நினைத்தவர்” என்பது ஞானிகளும் பிறரும் அடிமையுற்று அன்பு செய்து வழிபடும் முறையினையும் “சிந்தையுள் அறிப்புறும் அமுதாயவன்” என்பது அன்பர் மனத்தின்கண் தோன்றி இன்புறுத்தும் திறனையும் புலப்படுத்துவதைக் காணலாம்[14].

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

வேறொரு பாட்டில் அப்பர்,

“சிந்தையுட் சிவமாய் நின்ற தன்மையோடு அந்நியாய் அலையாய் புனல் வானமாய்ப்புந்தியாய்ப் புகுந்து உள்ளம் நிறைந்த எம் தந்தை” என்று கூறுவதும் குறிப்பிடத்தக்கது. இதில் அப்பர் இறைவனின் இயல்பினைக் குறிப்பிடுகின்றார். மேலும் யோக நெறியுடன் கூடிய இறை வழிபாட்டு முறையை அதாவது யோக நெறி நின்றோர் பொறி புலன்களை ஒடுக்கி அகக்கண்ணால் உள்ளத்தே உணர்வு வடிவாய் எழுந்தருளும் இறைவனைக் கண்டு வழிபடுவர். இறைவனும் அவர்களுக்கு அங்கே வெளிப்பட்டுத் தேனாய் இன்னமுதமாய் தெரிவரிய சிவானந்தத்தை நல்குவர். இவ் வழிபாட்டு முறையைத் திருநாவுக்கரசர் “உயிராவண்ணம் இருந்து உற்று நோக்கிஉள்ளக் கிழியின் உருவெழுதி உயிர் ஆவணம் செய்திட்டு உன் கைத் தந்தால் உணரப்படுவாரோடு ஒட்டி வாழ்த்தி” என்பது முதலிய பாடல்களால் எடுத்துக் கூறியுள்ளார். ஞான நெறியின் நலத்தை மிக்க நயம்படக் கூறுகின்றார் அப்பர்.

“ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள் , ஞானத்தால்

தொழுவேன் உனை நானல்லேன்

ஞானத்தால் தொழுபவர்கள் தொழக் கண்டு

ஞானத்தால் உனை நானும் தொழுவேனே”

என்பது முதலிய பாடல்களால் விளக்குகின்றார்[15].

இறைவனது திருவடியைச் சிறப்பித்து அப்பர் பாடியது போல் இவருக்கு முன்னும் பின்னும் தோன்றி நிலவிய சான்றோர்கள் எவரும் பாடியதே இல்லை. கட்டளையுடைய பாட்டுக்களான திருவிருத்தமும் திருத்தாண்டகமும் இவருக்கென்றே அமைந்த இனிய பாவினங்களாக உள்ளன.

**தலங்களும் தலப்பெருமைகளும்**

திருப்பதிகங்களால் அப்பர் பாடிய சிறப்பினை உடைய ஊர்கள் 125. இவற்றில் ஒரு திருப்பதிகமே பெற்றவை 76. இரண்டு திருப்பதிகங்கள் பெற்றவை 23. மூன்று திருப்பதிகங்கள் பெற்றவை 7. நான்கும் நான்கிற்கு மேற்பட்டவையும் ஆகிய திருப்பதிகங்கள் பெற்றவை 19. அவ்வாறு பாடிய பதிகங்களின் தொகை 275 ஆகும். பொதுப்பதிகங்கள் 37 உள்ளன. இவை தவிர தனிப்பதிகம் இல்லாது தலங்களிலோ அல்லது பொதுப்பதிகங்களிலோ சொல்லப்பட்ட தலங்களாக 102 தலங்கள் வருகின்றன. இவற்றுள் சில தலங்கள் ஒன்றுக்கு மேல் பதிகங்களைப் பெற்று வந்துள்ளன. திருவாவூரில் பாடிய பதிகமே மிக அதிகமானவையாக இடம்பெற்றுள்ளன. தலங்களைப்“பாடல் பெற்ற தலம்” எனவும் “வைப்புத் தலம்”எனவும் இருவகையாக பிரிப்பது மரபாகும்.

தல வருணனை, தலச்சிறப்பு, வழிபாட்டின் பயன் ஆகியவைகள் பாடல்களில் இடம்பெறுகின்றன. இயற்கைப் புனைவுக்குத் தலவருணனை இடந்தருகிறது. மலை,அருவி, ஆறு, கடல், வேலி, நிலா,வயல், பொழில், சோலை,மலர், முகில்,கனி, காடு முதலியவற்றை இறைமை உணர்வுடன் இணைத்துப்பாடிய பெருமை அப்பருக்கு உண்டு. மேலும் அரிசில், குடமுருட்டி, காவிரி, கெடிலம், கொட்டாறு, கொள்ளிடம், பொண்ணை, மண்ணி, வெண்ணி முதலான ஆறுகளின் கரைகளில் 26 தலங்கள் அமைந்துள்ளனவாகப் பாடல்கள் சொல்லப்பட்டுள்ளன. இராமேசுரம், ஒற்றியூர், கழிப்பாலை, கோகரணம் சாய்க்காடு, நாகை, புனவாயில், மங்கலக்குடி , மறைக்காடு, வலம்புரம் முதலான தலங்கள் கடற்கரைத் தலங்களாக அமைந்துள்ளன. சில தலங்களில் தலப் பெயரே கடவுளின் பெயராக விளங்குவதைக் காணலாம். தலங்களில் உறையும் இறைவனை பூவும் நீரும் கொண்டு வழிபட்டால் வினை தீரும்., பாவங்கள் நீங்கும் என்று தலப்பெருமை பேசப்படுவதை அப்பரது பல பாடல்களில் காணமுடிகிறது[16].

**வைப்புத் தலங்கள்**

தேவாரப் பதிகங்களில் தமக்கெனத் தனித்திருப்பதிகத்தினைப் பெறாமல் பிற தலப்பதிகங்களிலும் பொதுப் பதிகங்களிலும் பெயரளவில் குறித்துப் போற்றப்பெற்றதலங்களையே “வைப்புத் தலங்கள்” என்று கூறுவர்[17]. மூவரது தேவாரங்களிலும் இத்தலங்கள் இடம்பெற்றுள்ளன. 237 தலங்கள் இடம்பெறும் மூவர் தேவாரத்தில் 166 தலங்கள் அப்பர் தேவாரத்தில் இடம்பெற்றிருப்பதனைக் காணமுடிகின்றது[18]. அப்பர் மிக நீண்ட காலமாக இவ்வுலகில் வாழ்ந்த காரணத்தால் அவர் தேவாரத்தில் அதிகமான தலங்கள் இடம்பெற்றிருக்கின்றன போலும். மேலும் அப்பர் அருளிய தேவாரத்தில் ஆறாம் திருமுறையான திருத்தாண்டகத்தில் இவ்வைப்புத் தலங்களை அதிகமாகப் பார்க்க முடிகிறது.

**அப்பர் பயின்ற பண்கள்**

நான்காம் திருமுறையில் இந்தனம், காந்தார பஞ்சமம், காந்தாரம், குறிஞ்சி, கொல்லி, சாதாரி, சீகாமரம், பழந்தக்கராகம், பழம்பஞ்சுரம், பியந்தைக் காந்தாரம் ஆகிய பத்துப் பண்களில் 79 பதிகங்கள் அமைந்துள்ளன. 22ம் பதிகம் முதல் 79 வரை “திருநேரிசை” என்ற வகையில் அமைந்துள்ள பாடல்கள் இருக்கின்றன. இவற்றிற்கு பண் கொல்லி என்று தனியே குறிப்பிடப்பட்டிருத்தலின் திருநேரிசை என்பது யாப்பை நோக்கியபெயர் என்று தெரிகிறது. இப்பாடல்கள் அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தங்களாக உள்ளன. 80ம் பதிகம் முதல் 113 வரை திருவிருத்தம். இவை கட்டளை கலித்துறைப் பாடல்களாகும்[19].

**இலக்கிய நோக்கு**

அப்பர் ஷேத்திரக்கோவை,அடைவ, திருத்தாண்டகம் என்பவற்றில் பல தலங்களைத் தொகுத்துக் கூறுகிறார். நாலாந் திருமுறையில் ஐந்தாம் பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு பழமொழியை வைத்துப் பாடியுள்ளார். 7ந் திருப்பதிகம் திருவங்கமாலை, 11வது திருப்பதிகம் நமச்சிவாயத் திருப்பதிகம், 18 வது விடந்தீர்த்த திருப்பதிகம், ஐந்தாம் திருமுறை 89ஆவது திருப்பதிகம் என்பவற்றில் ஒன்று முதல் பத்து எண்களுள்ள பொருள்களைத் தொகுத்துப் பாடுகிறார். ஐந்தாம் திருமுறையில் 97ஆம் பதிகமாகிய சித்தத்தொகை, குறுந்தொகை என்பதில் 30 பாடல்கள் அடங்கியுள்ளன. இவற்றில் 2ஆம் பாட்டிலிருந்து உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் முறையே முதலில் வைத்துப் பாடியிருக்கின்றார். மொழிக்கு முதலில் வராத ட,ண,ர,ல,ழ,ள,ன என்பவற்றையும் ‘ய’ என்பதையும் இரண்டாவது எழுத்தாக அமைத்துப் பாடியிருக்கின்றார்.ஆய்தத்ததை அக்கண்ணா என வழங்கும் வழக்கை நினைத்து அக்கும் அமையும் என்று தொடங்கி ஒரு பாடலை அமைத்துள்ளார். ஆறாந் திருமுறையில் போற்றி போற்றி என வரும் திருத்தாண்டகங்கள் ஐந்து உள்ளன[20].

பெரும்பாலும் ஒவ்வொரு பதிகத்தின் இறுதிப் பாடலிலும் சிவன் இராவணனுக்கு அருள் செய்ததைக் கூறியிருக்கின்றார். கயிலைமலையை இராவணன் எடுக்க, சிவன் காலால் நெரித்து அவனை அடர்த்து அப்பால் அவன் சாம இசை எழுப்ப அவன் பிழையை மறந்து நலஞ் செய்த அருளே தம்மையும் தடுத்தாட்கொண்டதென்ற எண்ணத்தால் இந்த வரலாற்றைப் பாடினார் என்று சேக்கிழார் கூறியுள்ளார்.

அப்பர் இறைவனை நாயகனாகவும் தம்மை நாயகியாகவும் வைத்துப் பாடிய திருப்பதிகங்கள் பல உள்ளன. இவர் தலைவன் பால் ஊழியனுக்கு உள்ள அன்பு முறையாகிய தாச மார்க்கத்தில் நின்று வழிபட்டவர். இவருடைய பாடல்களில் இறைவனுடைய பெருமையும் பெருங்கருணைத் திறமும் பல நீதிகளும் வரும். மேலும் தம் குறையை எண்ணி, எண்ணி இரங்கும் பாடல்கள் பலவாகும். ஊழியன் தன் தலைவன் பெருமையை வியப்புணர்வுடன் கூறுவது போலவும் தான் பல குறைபாடு உடையவன் என்று குறைத்து பேசுவது போலவும் அவனை அடைந்தால் பல நன்மைகள் பெறலாம் என்று தன்னைப் போன்ற பிறருக்கும் எடுத்துரைப்பது போலவும் இவருடைய பாடல்கள் அமைந்திருக்கும்.

பாட்டு முழுவதும் ஒரே கருத்தைக் கூறும் பாடல்கள் பலவற்றை இவர் பாடியிருக்கிறார். பல கற்பனைக் காட்சிகளையும் நகைச்சுவைச் செய்திகளையும் உபதேசங்களையும் பாடல்களில் காண முடிகின்றது. பல காலம் உலகில் துன்பமும் இன்பமும் நுகர்ந்து வாழ்ந்தவர் ஆகையால் உலக அனுபவத்தைக் காட்டும் கருத்துக்கள் பலவற்றை இவரிடம் காணலாம்.

அப்பர் தேவாரத்தில் பல சிற்றிலக்கியக் கூறுகளைக் காண முடிகின்றது. இக்கூறுகளை 96 வகையாகப் பிரிக்கப்பட்ட வகைகளில் காண முடிகின்றது. திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் எனும் நான்கு யாப்பினால் பெற்ற பெயராகும். ஆனால் திருவிருத்தமும் திருத்தாண்டகமும் 96 வகையினுள் காணப்படுகின்றன. நேரிசை, விருத்தம், குறுந்தொகை, தாண்டகம் எனும் நான்கும் கோயில் பதிகத்தில் தொடங்கப் பெற்று பொதுப் பதிகத்தில் முடிந்துள்ளன[21].

**தூது**

தூது என்பது அகத்துறைப் பாக்களில் பெரும்பாலும் இடம்பெறும். அகப்பொருள் மரபில் ஊடல் உணர்த்தும் வாயில்களாய் அமைந்த பாணன் முதலியோர் தூதின்வளர் நிலையே தூது இலக்கியமாக வளர்ந்தது எனலாம். அப்பர் தேவாரத்தில்“திருப்பழனம்” என்னும் பதிகம் அகப்பொருள் பதிகமாக அமைந்துள்ளது.இதில் குயில், நெய்தல், குருகு, தென்றல், நாரை, பூவை, மான் ஆகியவற்றை தலைவி பழனத்தில் உறையும் இறைவனுக்கு தூது விடுகின்றாள்[22].

**உலா**

தலைவன் உலா வருவதைக் காண்பதற்கு நாள்தோறும் தன் சங்கு வளையல்கள் நெகிழவும் உடை சரியவும் இவள் வீதியின் அருகே அணைந்து நிற்பாள். வீதியுலா வராததைக் கண்ட இவள் திகைத்து நிற்கின்றாள். அவளுடைய இச்செயலைக் காண்பீராக என்று செவிலித்தாய் தலைவியைப் பற்றிக் கூறுகின்றார். இது போலவே அப்பரும் இறைவனது திருவுலாப் பற்றிப் பாடியுள்ளார். திருக்குறுக்கையில் அட்டமி முன் ஏழு நாளும் கூத்தபிரான் வீதியில் திருவுலாப்போவார்[23]. இதனை அப்பர் பாடலில் காண முடிகின்றது.

**பாதாதிகேசம்**

கோயிற் பதிகத்தில் இறைவனுடைய பாதாதிகேசத்தைப் பாடியுள்ளார். இப் பதிகமானது இறைவனுடைய திருவடியில் தொடங்கித் திருவடியிலேயே முடிக்கப்பெற்றுள்ளது. இதனைச் சிவதரிசன விதியாகக் கொள்வதும் உண்டு. இப் பாதாதிகேசமே ஒரு சிற்றிலக்கிய வகையாகப் பின்னர் உருவானது எனலாம்[24].

**திருவங்கமாலை**

திருவங்கமாலைப் பதிகத்தில் 12 பாக்கள் அமைந்துள்ளன. மனித உடலின் புற உறுப்புக்களும் அக உறுப்புக்களும் சிவபெருமானை வழிபட்டு நலமடைவதற்காகவே படைக்கப்பட்டன. ஆதலின் அந்தந்த உறுப்புக்களும் எவ்வாறு வழிபட்டு உய்தி பெறுதல் வேண்டும் என்பதனையும் அதுவே உயிர்களின் மேனிலை அடையும் வழி என்பதனையும் காட்டி மக்களை நல்வழிப்படுத்தும் முறையிலேயே இப்பதிகப் பாக்கள் அமைந்துள்ளன[25].

**ஷேத்திரக் கோவை**

ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம் அப்பர் தேவாரத்தில் உள்ளது. இப்பதிகத்தில் சிவபெருமான் வெளிப்பட எழுந்தருளியுள்ள தலங்கள் சொல்லப்பட்டுள்ளன. தலங்களை வாழ்த்துகின்ற முறையிலேயே இப்பாக்கள் அமைந்துள்ளன[26].

இவ்வாறான தூது, உலா, அங்கமாலை,ஷேத்திரக்கோவை ஆகிய சிற்றிலக்கியக் கூறுகளை அப்பர் தேவாரத்தில் காணமுடிகின்றது.

**சமய சமூக நோக்கு**

“என் கடன் பணி செய்து கிடப்பதே” என்றாற் போல, நாவரசர் ஆற்றிய தொண்டுகள் பலவாகும். இதனால் தான் சேக்கிழாரும் ‘திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறிவாழ வருஞானத் தவமுனிவர் வாகீசர்’ என இவ்வுலகில் நாவுக்கரசர் தோன்றியதன் சிறப்பைக் கூறுகிறார். கையில் உழவாரப்படை ஏந்தி திருக்கோயில்களிலும் திருவீதிகளிலும் துப்பரவு பணி செய்தார். அலகில் கலைத்துறை தழைப்ப அருந்தவத்தோர் நெறி வாழ வந்து அவதரித்தவர். ஆதலால் அன்பினால் என்பெலாம் உருகும் வண்ணம் பாமாலைத் தொண்டாற்றினார்.

சூலை நோயால் ஏற்பட்ட துயரங்களே அப்பர் சைவ நெறிக்கு மாற அடிப்படையாயின. சூலை நோயால் ஏற்பட்ட வேதனை இந்நிலையைத் தொடர்ந்து அவர் அனுபூதி மூலம் வழங்கிய சமயதத்துவ சிந்தனைகள் பலவாகும்.

“தோற்றதென வயிற்றினகம்படியே குடரோடு துடக்கி
முடக்கியிட ஆற்றேன்”
“உடலுள்ளுறு சூலை”
“சுடுகின்றது சூலை”

எனப் பலவாறு தாம் அனுபவித்த சூலை நோயை அப்பர் விளக்கியுள்ளார்.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் அப்பரது பாடல்கள் 4,5,6 ஆம் திருமுறைகளாக அமையினும் இவர் தம் “கூற்றாயினவாறு” என்ற பாடலே திருமுறைகளுள் தேவாரங்களுள் முதற் பாடலாகும். வேளாளர் மரபில் தோன்றியவராயினும் அப்பர் கூறும் சமயம் வைதிகநெறியே என்பதை அவரது பாடல்கள் தெளிவாக்குகின்றன [27]. அப்பர் தமது பாடல்களில் முழுமுதற் கடவுளாகச் சிவபெருமானையே போற்றுகின்றார். இதனை,

“சிவபெருமான் திருவடி சேரப் பெற்றோம்”
“சிவனெனும் ஓசையல்ல தறையோவுலகில்
திருநின்ற செம்மையுளதோ”

எனம் அடிகள் உறுதி செய்கின்றன.

அப்பர் கூறும் சிவனது திருமேனித் தோற்றத்தின் பல்வேறு அம்சங்கள் குறிப்பிடத்தக்கன. இவ்வகையில் எம்பிரான் என்றும் சிரித்த முகத்தை உடையவன். விரிசடையுடையான் எனப் பலவாறு தேவாரங்களில் குறிப்பிடுகின்றார். சிவனுக்கும் சிறப்பாக உள்ளது நெற்றிக்கண். மூன்று கண்களை உடையவர் ஆதலால் முக்கண்ணன் எனவும் அப்பர் வாழ்த்துகின்றார். சிவனது கழுத்து தனிச்சிறப்பு மிக்கது.அதுநீலநிறம் பொருந்தியது. இதனால் சிவன் நீலகண்டன் ஆகின்றான். இதனை அப்பர்,

“நஞ்சுண்ட கண்டன்”
“திருநீல கண்டன்”

எனப்பலவாறு வர்ணிக்கின்றார். இறைவனின் திருவுருவங்களில் நிலம், நீர்,தீ, வளி,விசும்பு எனும் ஐம்பூதங்களும் சூரியன், சந்திரன், இயமானன் ஆகிய எட்டு அம்சங்களும் உள்ளன. இவை இறைவன் அட்டமூர்த்தித் தோற்றத்தினன் என்பதை விளக்குகின்றன. இதனை அப்பரும்,

“அட்டமா உருவினனே” எனவும்
“எட்டு மூர்த்தியும் எம் இறை” எனவும்
“இருநான்கான மூர்த்தி” எனவும்

பலவாறு குறிப்பிடுகின்றார்.

இறைவன் கொண்ட திருக்கோலங்களுள் அர்த்தநாரீஸ்வர வடிவமும் ஒன்றாகும். அம்மையப்பர் திருவுருவத்தை அப்பர் தெளிவாகக் குறிப்பீடுகின்றார். எடுத்துக்காட்டாக,

“ஆணாய பெண்ணாய வடிவத்தோன்றும்”
“மங்கையைப் பாகம் வைத்தார்”
“பெண்ணினோடு ஆணுருவாய்நின்றான்”

என வரும் பாடல் அடிகளைக் குறிப்பிடலாம்.

சிவன் மேற்கொண்ட மற்றொரு வடிவம் ஹரிஹர வடிவம். இத்தோற்றத்தில் சிவனினதும் விஷ்ணுவினதும் அம்சங்கள் பாதி பாதியாகக் காணப்படுகின்றன. இறைவனின் அவ்வடிவினை அப்பர்,

“திருமாலோர் பங்கன்”
“மாயன் தன்னையோர் பாகமாக கொண்டார்”
“மாலுமோர் பாகமாகி”
“மாலோர்பாகம் திகழ்ந்தானை”

எனப்பலவாறு குறிப்பிடுகின்றார்.



© 2023, IRJTSR 

இறைவன் என்றுமுள்ளவன். ஆதியும் அந்தமும் இல்லாதவன். இதனை அப்பர் பாடல்களும் விளக்கி நிற்கின்றன.

"ஆதியாய் அந்தமானார்"
"முதலும் இறுதியும் தாமே போலும்"
"அந்தமும் ஆதியும் நின்ற"
"ஆதியும் ஈறும் ஆனார்"
"பின்னானும் முன்னானுமானான்"
எனப்பல பாடல்களில் விளக்குகின்றார்.

"இறைவனின் உறைவிடம் கைலை என்பதைப் புராணங்கள் குறிப்பிடுகின்றன. அப்பரும் இது பற்றிக் குறிப்பிடுகையில்,

"மலையலால் இருக்கையில்லை"
"மலையானை"
"பொருப்பிடையான்"
என்று கூறுகின்றார். மேலும் சிவனின் வீரச்செயல்கள் பற்றிப் புராணங்கள் பெரிதும் விளக்கிக் கூறுகின்றன. இவற்றுள்ளே தலை சிறந்தன எட்டுச் செயல்கள். இவற்றை அட்டவீரட்டச் செயல்கள் என்பர். இறைவனது இவ் அட்ட வீரட்டச் செயல்கள் பற்றி அப்பரும் குறிப்பிட்டுள்ளார்.

இறைவன் திரிபுரஞ் செற்றதை,
"திரிபுரஞ் சென்று ஒரு மூவர்க்கு அருள் செய்தானை" எனவும்
"அவுணர்புரம் ஒரு நொடியில் எரி செய்தான்" எனவும் குறிப்பிடுகின்றார்.

அப்பர் சிறந்த சமுதாய சீர்திருத்தவாதியாக விளங்கியதால் இவரைச் சேக்கிழார் "பெரியார்" என்றே அழைத்தார். இவர் நாவரசராக இருந்தாலும் வெறும் சொல்லால் சீர்திருத்தம் பேசாது தாமே தொண்டராய் உழவாரப்படை கொண்டு ஊர் தோறும் கோயில் தோறும் புறத்துாய்மை செய்து பாடல்களால் மக்களது அகத்துாய்மை பெற வழிகாட்டினார். இவர் அக்காலத்தில் பெருமன்னராய் வாழ்ந்த பல்லவ மன்னனை எதிர்த்துப் பெரு வெற்றி கொண்டார்[28].

"நாமார்க்கும் குடியல்லோம்"
"நாவலந் தீவகத்தினுக் காவலரே ஏவி விடுத்தாரேனும்
கடவமல்லோம்"
"பாராண்டு பகடேறி வருவார் சொல்லும்
பணி கேட்கக் கடவோமா"
"அஞ்சுவது யாதொன்றுமில்லை,
அஞ்சவருவதுமில்லை"
என்பவை அப்பரது வாக்குகள். எனவே கொடுமைகளுக்கு அஞ்சாது நாட்டு மக்கள் வாழ்வுக்கு வழிவகுத்த முதல் சீர்திருத்தவாதி அப்பரே ஆவார்.

அப்பர் கலையுள்ளம் பெற்றவர். இவர் பிறந்ததால் பல கலைத்துறைகள் தழைத்தன என்பதை இவர் பிறக்கும் நிலையிலேயே 'அலகில் கலைத்துறை தழைப்ப அவதாரஞ்செய்தார்" எனச் சேக்கிழார் கூறியுள்ளார். அப்பர் தமிழகத்தோடு நின்றுவிடாது இமயம் வரை நடந்து சென்று நாடே ஒன்றெனக் காட்டி ஒருமை உணர்வை வளர்த்தார்.இதனை அப்பரது பாடல்களே தெளிவாக்குகின்றன.

"ஆரியந் தமிழோடிசையானவன்"
"செந்தமிழோடாரியனை"
"வடமொழியும் தென் தமிழும் ஆயினான் காண்"
"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்"
என்பன போன்ற பாடல் அடிகள் இங்கு குறிப்பிடத்தக்கன. எனவே வடக்கு தெற்கு இட வேறுபாட்டினை மட்டுமன்றி மொழி வேறுபாட்டினையும் நீக்கி நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு உழைத்த முதற்தொண்டர் அப்பராவார். மேலும் சாதி வேறுபாட்டைச் சாடியவர் இவர்[29]. இதனை,

"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"
என்று முழங்கி சாதி வேறுபாட்டைக் களைந்தார். அவ்வாறே சமய வேறுபாடுகளையும் கண்டித்து எங்கும் ஒரே இறைவனே உள்ளான் எனக் காட்டுகின்றார்.

"சமயம் ஆறினுக்கும் தலைவன்"
"மிக்க சமயங்கள் ஆறின் உருவாகி"
"ஆறொன்றிய சமயங்கள்"
என்பன போன்ற பாடல் அடிகள் அப்பரது வாக்குகளாகும். எனவே இக்கருத்துக்களிலிருந்து அப்பர் பரந்த பாரதத்தினை சமயத்தாலும் மொழியாலும் வேறுபாடின்றி இணைக்கப் பாடுபட்ட முதல் தொண்டர் என்பது தெளிவாகும்.

சமய சமுதாயத் துறைகளுடன் அறிவியல் துறையிலும் அப்பர் சிறந்திருந்தார் என்பதையும் அவரது பாடல்கள் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது[30]. உலகம் வட்ட உருண்டையாக உள்ளதையும் நிலம், நீர், தீ, வளி, வான் ஆகிய இவை ஒன்றிலொன்று எவ்வாறு ஒடுங்குகின்றது என்பதையும் தாய் வயிற்றில் கரு, படிப்படியாக எவ்வாறு வளர்ந்து முற்றுருவம் எய்துகிறது என்பதையும் மின்னல் இடிகளின் தோற்ற வேகங்கள் பற்றியும், நீராவி பற்றியும் வேறு பல உண்மைகளையும் அறிவியல் அறிஞர்கள் வியக்கும் வகையில் அப்பர் சுட்டிக்காட்டி விளங்க வைத்தார் என்பது வியப்பிற்குரியது.

**தத்துவ நோக்கு**

சைவ சித்தாந்த நூல்கள் தமிழில் பதின்மூன்றாம் நூற்றாண்டிலேயே எழுந்தன. இவற்றைச் சாத்திர நூல் என்றும் பன்னிரு திருமுறைகளைத் தோத்திர நூல் என்றும் கூறுவர். இத்தோத்திர நூல்கள் சைவ சித்தாந்த உண்மைகளை அனுபூதிமான்களுடைய அனுபவ வாயிலாக கூறுகின்றன. இத்தோத்திர நூல்களுள் 4ம்,5ம்,6ம் திருமுறைகளில் பொதிந்துள்ள தத்துவக் கருத்துக்களை நோக்குவது இன்றியமையாதது.

சைவ சித்தாந்தம் சிவனை முழுமுதற் தெய்வம் என்று போற்றுகின்றது. அது போலவே அப்பரும் சிவனையே முழுமுதற் பொருளாகத் தேவாரங்களில் குறிப்பிட்டு உள்ளார்.

"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே"

"உலகுக் கொருவனே போற்றி போற்றி"

"ஒருத்தனாய் உலகேழும் தொழ நின்று"

"தெளிவார்க் கெலாம் ஒருவனே"

என அப்பர் சிவனையே முழுமுதற் தெய்வமாகப் போற்றுகின்றார். முழுமுதல் தெய்வமாக விளங்கும் சிவன் தனக்கு உவமையில்லாதவன், தாமே எல்லாமாய் இருப்பவன், அவனே உடனின்று இயக்குபவன், எல்லாவற்றுள்ளும் மறைந்திருப்பவன், பல வேடங்களைக் கொண்டவன், உலகத்தைக் கடந்தவன், எண்குணத்தானவனாகவும் அப்பரால் போற்றப்படுகின்றார்.

இறைவன் பல சமயங்களாலும் கருதப்படுபவன், எவ்வுருவில் அவனைப் பாவித்து வணங்குகின்றோமோ அவ்வுருவில் அவன் நின்று அருள் செய்வான் எனும் சைவசித்தாந்தம் கூறும் உண்மையை அப்பர் விளக்கியுள்ளார். இறைவனை அடைவதற்கு வழி திடமான அன்பே. அந்த அன்பும் அளவு கடந்து ததும்ப வேண்டும் என்பதே அப்பரது குறிக்கோள். விறகில் மறைந்துள்ள தீ போலவும், பாலில் மறைந்துள்ள நெய் போலவும் இறைவன் மறைந்து நிற்கின்றான். அன்பு உணர்வு என்னும் கோல் கொண்டும் கயிறு கொண்டும் அழுந்திக் கடைந்தால் இறைவன் தானே வெளிப்படுவான் என்பதையும் அப்பர் விளக்கியுள்ளார்.

முழுமுதற் தெய்வமாக விளங்கும் சிவன் தனக்குவமை இல்லாதவன், தாமே எல்லாமாய் இருப்பவன், அவனே உடனின்று இயக்குபவன், எல்லாவற்றுள்ளும் மறைந்திருப்பவன், பல வேடங்களைக் கொண்டவன், உலகத்தைக் கடந்தவன், அவர் எண்குணத்தான் எனவும் அப்பரால் போற்றப்படுகின்றார்.இதனை,

"ஒப்புடையான அல்லன் ஒருவன் அல்லன்"

"மற்றாரும் தன்னொப்பாரில்லாதவன்"

எனக் குறிப்பிடுகின்றார். மேலும் சிவனே உடன் நின்று இயக்குபவன் என்பதை

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே….."

எனும் பாடல் மூலம் விளக்கியுள்ளார். இதனைச் சிவப்பிரகாசம்

"நிறுத்திடுவன் நினைத்த உரு நிமலன் தானே"

என்று கூறுகிறது.

அப்பர் இறைவனை "மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்" எனப் போற்றுகின்றார். இதனையே உமாபதி சிவாச்சாரியார்,

"நலமிலன் நண்ணினார்க்கு நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்"

என்று குறிப்பிடுகின்றார்.

வினைகளைத் தீர்ப்பவன் சிவனே என்பதை அப்பர்,

"நினைப்பார் தம் வினைப்பாரம் இழப்பான் கண்டாய்"

என்று பாடுகின்றார்.

சைவ சித்தாந்தம் கூறும் பசு பற்றிய கருத்துக்களையும் அப்பரது பாடல்களில் காண முடிகின்றது. ஆன்மா அணுத்தன்மைப்பட்டு உடலில் நிற்கும் தன்மையையும் தன் உயிருக்குயிராய் நின்று தன்னை இயக்கும் இறைவனை ஞானத்தால் அடைந்து வீடுபேறடையும் தன்மையும் உடையது. இதனை அப்பர்,

"ஊனாகி உயிராகி யதனுள் நின்ற
உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் காட்டாநின்றாய்"

எனக் கூறியுள்ளார்.

மேலும் ஏனைய தேவார ஆசிரியர்களின் பாடல்களில் இடம்பெறாத ஆன்மா என்ற சொல் அப்பர் தேவாரத்திலே இடம்பெறுகின்றது. இதனை,

"வசிப்பெனும் வாழ்க்கை வேண்டா

வானவரிறை வனின்று
புசிப்பதோர் பொன்னாலாக்கை
அதனொடும் புணர்வு வேண்டில்
அசிர்ப்பெனு மருந்தவத்தால்
ஆன்மாவினிடமதாகி
உசிர்ப்பெனு முணர்வு முள்ளா
ரொற்றியூருடைய கோவே''

எனவரும் பாடல் மூலமாக அறிய முடிகின்றது. இவ்வாறு அப்பர் கூறியுள்ள ஆன்மா பற்றி சைவ சித்தாந்த நூல்கள் பல விபரங்களைத் தருகின்றன. ஆன்மா பற்றிய கருத்தினை உமாபதி சிவாச்சாரியார் குறிப்பிடுகையில்,

''பிறந்தநாள் மேலும் பிறக்கும் நாள் போலும்துறந்தார் துய்ப்போர் தொகை''

எனக் கூறியுள்ளார்.

பாசத் தளையாக ஆணவம், கன்மம், மாயை, பாசம் பற்றி ஆகியன சித்தாந்த நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. பாசம் பற்றி அப்பரும்,

''ஈசனே பாச வினைகள் தீர்க்கும் மன்னவனே''எனக் கூறுகின்றார்.

இவ்வாறாகப் பிற்காலத்தில் வளர்ச்சி பெற்ற சைவ சித்தாந்தக் கருத்துக்களின் அடிப்படைச் சிந்தனைகள் அப்பரது பாடல்களில் காணப்படுகின்றமை தெளிவாகின்றது.

**ஒப்பீடு**

அப்பரது பாடல்களில் அவர் தம்முடைய குறைபாடுகளைக் கூறி இரங்குவதும் தமை ஆட்கொண்ட இறைவனது பெருங்கருணையை நினைத்து உருகுவதும் என்பன போன்ற தன்மைகள் இயல்பாகக் காணப்படுகின்றன. எனவே இவரது பாடல்கள் சம்பந்தர், சுந்தரர் ஆகியோரது பாடல்களை விட மிகுதியாகவே உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தவை.

சம்பந்தர் பாடல்களில் இந்தப் பதிகத்தைப் பாடினால் இன்ன பலன் கிடைக்கும் என்பதனை எல்லாப் பதிகங்களின் இறுதிப் பாடலில் கூறுகிறார். மேலும் இப் பாடல்களில் சம்பந்தர் தம்மைப் பெருமையாகவும் கூறிக்கொள்கிறார். இதுவே''திருக்கடைக்காப்பு'' எனப்படும். ஆனால் அப்பரது பாடல்களில் இவ்வமைப்பு முறையைக் காண முடியாது. இவர் தம்மை விட இறைவனது பெருமையை விரிவாகப் பேசுவார். அப்பர், குறுந்தொகையில் இந்தத் தலத்தில் உறையும் பெருமானைப் பூவும் நீரும் கொண்டு பண்ணோடு பாடி வழிபட்டால் இன்ன பலன் கிடைக்கும் என்று கூறியுள்ளார்.

**முடிவுரை:**

இவ்வாறாகத் திருமுறை ஆசிரியருள் அப்பர் தலை சிறந்த திருவருள் அனுபவம் கைவரப் பெற்றவர். இறைவனின் பாதார விந்தங்களை நெஞ்சகத்தே நிறுத்தியமையால் நடமாடும் கோயிலாகத் திகழ்பவர்.

''அன்பிலாற் பொருளில்லை ஐயன் ஐயாறனார்க்கே''

என எடுத்தோதியவர்.''தொண்டலாற் உயிற்கு ஊதியமில்லை'' தொண்டலாற் எனத் தொண்டின் நெறி உணர்த்தியவர். பக்தி உணர்வில் நின்று இறைவன் புகழ் பாடியவர். இந்த வகையில் எதிலும் தன்னலமற்று, உலக வாழ்வே பிற உயிர் வாழ்வே தன் வாழ்வு எனக் கொண்டு தொண்டே தம் வாழ்வாக பிறர் வாழத் தாம் வாழ்ந்து பிறர் வாடத் தாம் வாடி அவ்வாட்டத்திற்கு வழி கண்டு உதவி, என்றும் உலக உயிர்களை ஓம்புதலே உயர்ந்த மெய்ச் சமயம் என்பதை உலகுக்கு உணர்த்திய சமயத் தலைவர். சமுதாய சீர்திருத்தவாதி அப்பர் ஆவார்.

**அடிக்குறிப்புகள்**

[1] அறிவுடை நம்பி.மா,''திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள்'', கருமணி பதிப்பகம், மதுரை, 1996, ப:8
[2] தணிகாசல முதலியார்.ஈஎன்,''அப்பர், கலாநிலையம் தொகுதி 2
[3] சீனிவாசபிள்ளை.கே,''தமிழ் வரலாறு'', ப:64 -73
[4] இராசமாணிக்கனார்.மா,''பெரியபுராண ஆராய்ச்சி, மாடல் பப்ளிகேசன்ஸ் சென்னை, 1948, ப:82
[5] சுப்பிரமணியபிள்ளை.கா,''இலக்கிய வரலாறு'', ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 5ம் பதிப்பு, 1958, ப:335
[6] இராமச்சந்திரச் செட்டியார்,''திருநாவுக்கரசர் வரலாறு'' சென்னை, 1962, ப:38
[7] வெள்ளைவாரணர், பன்னிரு திருமுறை வரலாறு, பகுதி 1, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1962,ப:376
[8] துரைசாமிப்பிள்ளை.சு, ஔவை,''சைவ இலக்கிய வரலாறு'', அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகா , 1958, ப:126
[9] சுப்பிரமணியன்.நா, கௌசல்யா சுப்பிரமணியன்,''இந்திய சிந்தனை மரபு'', சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை, 1996,ப:92
[10] இராமதாஸ்.எஸ்.ஆர்,''இந்தியப் பண்பாடு'', தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம், சென்னை,1990,ப:248
[11] அறிவுடைநம்பி.மா.கா, மு.கு.நூ, ப:51
[12] கலைக்களஞ்சியம் தொகுதி 6, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, ப:4
[13] அறிவுடைநம்பி.மா.கா, மு.கு.நூ, ப:48
[14] துரைசாமிப்பிள்ளை.சு, ஔவை,''சைவ இலக்கிய வரலாறு'', அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1958,ப:133
[15] துரைசாமிப்பிள்ளை.சு, ஔவை,''சைவ இலக்கிய வரலாறு'', அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1958,ப:133
[16] அறிவுடைநம்பி.மா.கா, மு.கு.நூ, ப:48
[17] வெள்ளைவாரணர்.க, மு.கு.நூல், ப:903
[18] அறிவுடைநம்பி.மா.கா, மு.கு.நூ, ப:50
[19] கலைக்களஞ்சியம் தொகுதி 6, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, ப:4
[20] மேலது,ப:4

[21] அறிவுடைநம்பி.மா.கா, மு.கு.நூ, ப:243
[22] மேலது,ப:243
[23] மேலது,ப:243
[24] மேலது,ப:244
[25] மேலது,ப:244
[26] மேலது,ப:244
[27] கலைக்களஞ்சியம் தொகுதி 6, ப:3
[28] வாழ்வியற்களஞ்சியம் தொகுதி 1, ப:360
[29] மேலது,ப:360
[30] மேலது,ப:360

**ஊசாவியவை**


- அறிவுடை நம்பி.மா,(1996)“திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள்”, மதுரை.
- சுப்பிரமணியன்.நா,கௌசல்யா சுப்பிரமணியன்,(1996) “இந்திய சிந்தனை மரபு”, சென்னை.
- சுப்பிரமணியபிள்ளை.சி,(1960) “அப்பர் விருந்து”, புதுக்கோட்டை.
- இராசமாணிக்கனார்.மா, (1948)“பெரியபுராண ஆராய்ச்சி, சென்னை.
- செங்கல்வராயபிள்ளை.வ.சு, (1958)“தேவார ஒளி நெறிக் கட்டுரை” திருநெல்வேலி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்,சென்னை.
- ஞானசூரியன்.இ, (1978) ”அஞ்சா நெஞ்சம்” உலகத் தமிழ் மறுமலர்ச்சி நிலையம், லண்டன்.
- துரைசாமிப்பிள்ளை.சு, ஔவை, (1958)“சைவ இலக்கிய வரலாறு”, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
- இராமதாஸ்,(1990)“இந்தியப் பண்பாடு”,தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம், சென்னை.
- வாழ்வியற்களஞ்சியம் தொகுதி1, (1991)– தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
- கலைக்களஞ்சியம் தொகுதி 6, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.
- சுப்பிரமணியபிள்ளை, (1970)“அப்பர் சுவாமிகள் சரித்திரம்”, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், சென்னை.
- வெள்ளைவாரணர், (1962) பன்னிரு திருமுறை வரலாறு, பகுதி 1, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.
- தேவாரம் அடங்கன் திருமுறை, திருவாவடுதுறை ஆதீனம்